# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 7

More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 2 Questions

21. கழுத்தில் சூடுவது ________________.

**A) தார்**

B) கணையாழி

C) தண்டை

D) மேகலை

22. கதிரவனின் மற்றொரு பெயர் ___________________.

A) புதன்

**B) ஞாயிறு**

C) சந்திரன்

D) செவ்வாய்

23. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

A) வெண் + குடை

**B) வெண்மை + குடை**

C) வெம் + குடை

D) வெம்மை + குடை

24. 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________.

**A) பொன் + கோட்டு**

B) பொற் + கோட்டு

C) பொண் + கோட்டு

D) பொற்கோ + இட்டு

25. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________________.

A) கொங்குஅலர்

B) கொங்அலர்

**C) கொங்கலர்**

D) கொங்குலர்

26. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______________.

A) அவன்அளிபோல்

**B) அவனளிபோல்**

C) அவன்வளிபோல்

D) அவனாளிபோல்

27. காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் – அங்குத் தூணில் அழகியதாய் – நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய் – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதிதாசன்

B) அழ. வள்ளியப்பா

C) வாணிதாசன்

**D) பாரதியார்**

28. அந்தக் காணி நிலத்திடையே – ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும் – அங்குக் கேணி அருகினிலே – தென்னைமரம் கீற்றும் இளநீரும் – இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் (தொகுப்பு) எது?

A) பாரதிதாசன் கவிதைகள்

B) அழ. வள்ளியப்பா கவிதைகள்

C) வாணிதாசன் கவிதைகள்

**D) பாரதியார் கவிதைகள்**

29. பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம் பக்கத்திலே வேணும் * – நல்ல முத்துச் சுடர் போலே – நிலாவொளி முன்பு வரவேணும் – இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

A) பாரதிதாசன்

B) அழ. வள்ளியப்பா

C) வாணிதாசன்

**D) பாரதியார்**

30. அங்குக் கத்துங் குயிலோசை – சற்றே வந்து காதில் படவேணும் – என்றன் சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய் இளம் தென்றல் வரவேணும் – இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் (தொகுப்பு) எது?

A) பாரதிதாசன் கவிதைகள்

B) அழ. வள்ளியப்பா கவிதைகள்

C) வாணிதாசன் கவிதைகள்

**D) பாரதியார் கவிதைகள்**

31. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர், அவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர் – இந்த கூற்றோடு தொடர்புடையவர் யார்?

A) மீ.ராசேந்திரன்

**B) பாரதியார்**

C) மனோன்மணியம்

D) நாமக்கல் கவிஞர்

32. எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். தம் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தவர் – இந்த கூற்றோடு தொடர்புடையவர் யார்?

A) சுத்தானந்த பாரதியார்

B) பாரதிதாசன்

**C) பாரதியார்**

D) நாமக்கல் கவிஞர்

33. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்ற நூல்களின் ஆசிரியர் யார்?

A) மீ.ராசேந்திரன்

**B) பாரதியார்**

C) மனோன்மணியம்

D) நாமக்கல் கவிஞர்

34. 'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல் ___________.

A) ஏரி

**B) கேணி**

C) குளம்

D) ஆறு

35. 'சித்தம்' என்பதன் பொருள் ____________.

**A) உள்ளம்**

B) மணம்

C) குணம்

D) வனம்

36. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ___________.

**A) அடுக்குகள்**

B) கூரை

C) சாளரம்

D) வாயில்

37. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.

A) நன் + மாடங்கள்

B) நற் + மாடங்கள்

**C) நன்மை + மாடங்கள்**

D) நல் + மாடங்கள்

38. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________________.

A) நிலம் + இடையே

**B) நிலத்தின் + இடையே**

C) நிலத்து + இடையே

D) நிலத் + திடையே

39. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ____________________.

A) முத்துசுடர்

B) முச்சுடர்

C) முத்துடர்

**D) முத்துச்சுடர்**

40. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____________________.

A) நிலாஒளி

B) நிலஒளி

**C) நிலவொளி**

D) நிலவுஒளி

winmeen.com